முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1403

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.08.2023,** புதன்கிழமை

1. ஞானகீர்த்தியே அரங்கா வாழ்க
ஞானசித்தியே தேசிகா வாழ்க
தானதர்மத்தின் மூர்த்தியே வாழ்க
தவபலம் கொண்ட சித்தியே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 17 ம் நாள், 02.08.2023, புதன்கிழமை)
ஊழ்போக்கும் மகா சக்தி நீ
உலகை காக்கும் ஒரே தவசி நீ
3. தவசி உன் அற்புதம் உலகறிய
தரணியில் ஞான ஆட்சி மலரக்கூடும்
அவதாரம் உன் பெருமை உலகம் அறிய
அனைவருக்கும் அழியாமை சடுதி இலகுவாய் எட்டும்
4. எட்டவே இந்த கலியுகத்தில்
எல்லா வகையும் அரங்கன் நீ சர்வபலம் பெற்று
வல்லமைபட உலகோர்க்கு அருளிவர
வரமென உன்வழி பெறுகின்ற தீட்சையே
5. தீட்சையே உலகோர்க்கு பாதுகாப்பாய் மாறும்
தெரியவே ஆறுமுகன் யான் அதன்வழி இறங்கி
அறியாமை போக்கி உலகோர்க்கு ஆற்றல்பட
அனைத்து ஞானமும் தந்து அருள்புரிந்து காப்புத்தருவேன்
6. காக்கவே அரங்கனே கலிவெல்லப் பிறந்த ஞானி
கருணைகொண்டு அரங்கன் தருகின்ற அருளமுதே
உலகோர்க்கு ஞானபலம் தரும் அருமருந்தாகும்
ஆகவே அரங்கன் வழிவர அனைத்தும் வெற்றியாக மாறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—